Written by Administrator
Tuesday, 09 June 2009 05:20 - Last Updated Tuesday, 09 June 2009 13:11

□□□□□□□ 08.06.2009

ஓஎன்ஜிசி ரூ. 1,610 கோடி முதலீடு

புது தில்லி, ஜூன் 6: எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கார்ப்பரேஷன் நிறுவனம் (ஓஎன்ஜிசி) ராஜஸ்தானில் எண்ணெய் அகழ்வுப் பணிக்கு ரூ. 1,610 கோடி கூடுதலாக முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. இப்புதிய திட்டத்துக்கு நிறுவனத்தின் இயக்குநர் குழுமம் வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்தது.

ராஜஸ்தானில் நிலத்தில் எண்ணெய் எடுக்கும் பணியை வெல்ரன் நிறுவனம் மேற்கொண்டது. இதில் 30 சதவீத பங்கு கனவ ஓஎன்ஜிசி பெற்றது. ஆனால் திட்டப் பணிகளின் மதிப்பு கணிக்கும்போது அதை கணக்கிடாது. இதற்காக திட்டப் பணியின் மதிப்பீட்டை வெல்ரன் இந்தியா நிறுவனம் அளித்தது.

இந்நிறுவனம் கணக்கீட்டாளர்தரு தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் வெல்ரன் எனர்ஜி பிவிஎல் நிறுவனத்தின் அங்கமாகும். ஆனால் அரசு ஓஎன்ஜிசி நிறுவனம் பரிசீலிப்பதாகக் கூறி திட்டம் பிரேட்டது. இதனால் இந்திட்டம் நிறைவேறாமல் போகும் அபாயம் ஏற்பட்டது.

முதலீட்டுக்கு ஏற்ப லாபம் கிடைக்காது என அமைச்சகம் தெரிவித்ததால் இந்திட்டப் பணியைத் தொடர ஓஎன்ஜிசி விரும்பவில்லை. ஒரு கட்டத்தில் இந்திட்டப் பணியிலிருந்து வெளியேறவும் ஓஎன்ஜிசி முடிவு செய்தது.

இந்நிலையில் ஓஎன்ஜிசி இயக்குநர் குழுமம் கூடுதல் முதலீட்டுக்கு அனுமதி அளித்தது. இதனால் இந்திட்டம் நிச்சயம் நிறைவேறும் என்பது உறுதியாகியுள்ளது.

இந்த எண்ணெய் எடுக்கும் பணிக்கு முன்னர் 124 கோடி டாலர் (ரூ. 5,704 கோடி) என மதிப்பீடு செய்யப்பட்டது. பின்னர் இச்சேரக்க விலையாகி கச்சா காரணமாக 239 கோடி டாலராக (ரூ. 10,994 கோடி) உயர்த்தது. இந்த

திட்ட மதிப்புயரவில் 30 சதவீதத்தை ஓஎன்ஜிசி ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளது.

இதுகுறித்த எண்ணெய் வயல்களில் எண்ணெய் எடுப்பதற்கு ஓஎன்ஜிசி முதலீடு செய்த தொகை 87 கோடி டாலரிலிருந்து 122 கோடி டாலராக உயர்த்தியுள்ளது.

இந்தத் திட்டப் பணியில் செய்யப்படும் முதலீட்டுக்கு உரிய அளவில் எண்ணெய் கிடைக்காது என அமைச்சகம் தெரிவித்ததால் இதில் ஓஎன்ஜிசி நிர்வாகம் அவ்வளவாக ஆக்கறை காட்டவில்லை. ஆனால் பெட்ரோலிய அமைச்சகம் நெருக்கடி அளித்ததால் தற்போது இந்திட்டப் பணிக்கு ஓஎன்ஜிசி இயக்குநர் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

இங்குள்ள வயலில் இருந்து எடுக்கப்படும் கச்சா எண்ணெய்க்கு பெறப்படும் ராயல்டி தொகைக்கு வரியை ஓஎன்ஜிசி செலுத்த வேண்டும். ஆனால் வெல்ரன் நிறுவனத்துக்கு ராயல்டி செலுத்துவதில் குழப்பங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 70 டாலருக்கு விற்கப்பட்டால் வரி, ராயல்டி செலுத்தியது போக ஓஎன்ஜிசி நிறுவனத்துக்கு வெறும் 5.78 டாலர் மட்டுமே கிடைக்கும். முதலீட்டுக்கு ஏற்ற லாபம் கிடைக்காதால் இந்த எண்ணெய் வயலால் ரூ.14,அறிர கோடி வரை நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஏற்கெனவே முதலீடு செய்த தொகையை திரும்ப அளித்துவிடுவது அல்லது ராயல்டி தொகையை முழுமையாக அளிக்க வேண்டும் என்று ஓஎன்ஜிசி கோரிக்கையை அரசு ஏற்கவில்லை. இத்திட்டப் பணியிலிருந்து முற்றிலுமாக விலகி விடுவதாக ஓஎன்ஜிசி கருதியதையும் ஏற்கவில்லை.

கூடுதல் முதலீட்டுக்கு ஒப்புதல் அளித்ததால் இந்த மாத இறுதியில் எண்ணெய் உற்பத்தி தொடங்கும் எனத் தெரிகிறது. 2011-ம் ஆண்டில் இங்கு 80 லட்சம் டன் எண்ணெய் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.